தகவல் சட்டம் 2005

அறியும் உரிமை

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590


**ஆணை நாள் 12.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**

**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-12830/A/2019**

திரு R. செந்தில் .. மேல்முறையீட்டாளர்
த/பெ ராமசாமி நாடார்
5/174, தெற்குத் தெரு
காயாமொழி & அஞ்சல்
திருச்செந்தூர் வட்டம்
தூத்துக்குடி மாவட்டம்.

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பொது அதிகார அமைப்பு
(தலைமையிடம்)
மாவட்ட காவல் அலுவலகம்
தூத்துக்குடி மாவட்டம்

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 03.09.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் தூத்துக்குடி மாவட்டம் காவல்துறை கண்காணிப்பாளரிடம் 25/03/2019 அன்று A. வனஜா, க/பெ நாராயணன், என்பவர் கொடுத்த புகார் மனு எண்.SBGDP 11895/2019 நகல், அந்த புகார் மனுவின் விசாரணையில் மனுதாரர் கொடுத்த வாக்குமூல நகல், திருச்செந்தூர் பாரத ஸ்டேட் வங்கி மேலாளர் கொடுத்த வாக்குமூல நகல், தான் கொடுத்த வாக்குமூல நகல், புகார் மனு எவ்வாறு முடிக்கப்பட்டது என்ற விவரம் போன்ற தகவல்களை வழங்கக் கேட்டுள்ளார்.

2. இதுகுறித்து, பொதுத் தகவல் அலுவலர் 23/09/2019 தேதியிட்டு மனுதாரருக்கு பதில் அனுப்பியுள்ளார். பெறப்பட்ட பதிலில் திருப்தியடையாத மனுதாரர், பிரிவு 19(1)-ன்கீழ் 24.10.2019 அன்று முதல் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதுகுறித்து, 21/11/2019 தேதியிட்டு மனுதாரருக்கு பதில் அனுப்பப்பட்டுள்ளது. அதன்பின்னர், மனுதாரர் பிரிவு 19(3)-ன்கீழ் 20/12/2019 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

3. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 13.10.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் ஆணையத்திற்கு கடிதம் மூலமாக தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

4. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் 23/தஅஉச/ஆணை.மே.மு./கூ.கா.க.(த.இ)/தூடி/2020 நாள் 19/10/2020 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக வழங்கியதாகத் தெரிவித்துள்ளார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 11.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், **மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

ஒம்/-(ரா. ராஜகோபால்)
மாநில தலைமைத் தகவல் ஆணையர்
//ஆணைப்படி//

உதவிப்பதிவாளர்

**வழக்கு எண். SA-12830/A/2019**

பெறுநர்

பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
(தலைமையிடம்)
மாவட்ட காவல் அலுவலகம்
தூத்துக்குடி மாவட்டம்

**மனுதாரர்**

திரு R. செந்தில்
த/பெ ராமசாமி நாடார்
5/174, தெற்குத் தெரு
காயாமொழி & அஞ்சல்
திருச்செந்தூர் வட்டம்
தூத்துக்குடி மாவட்டம்.

Rs/Sr.PS 12.11.2020